பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 14 புதன்கிழமை 27.05.2020 கதிர் 203

## திகாம்பரம் இரங்கல்

கொழும்பு, மே 27

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமாகிய ஆறுமுகம் தொண்டமானின் திடீர் மறைவு மலையக மக்களுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு எனத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் முன்னாள்

பக்கம் 02 »

## அரசுக்கும் மலையக மக்களுக்கும் ஆறுமுகத்தின் மறைவு பேரிழப்பு

### வைத்தியசாலையில் பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, மே 27

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் திடீர் மறைவு குறித்துக் கேள்விப்பட்டவுடன் நேற்றிரவு அவரின் சடலம் வைக்கப்பட்டிருந்த தலங்கம வைத்தியசாலைக்கு விரைந்த பிரதமர் மஹிந்த

பக்கம் 02 »

## கடற்படை பாதிப்பு 636

– 332 பேர் குணமடைவு
– 304 பேர் சிகிச்சையில்

கொழும்பு, மே 27

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட கடற்படையினரின் எண்ணிக்கை 636 ஆக அதிகரித்துள்ளது. நேற்று 8 கடற்படையினர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 19 கடற்படையினர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து நேற்று வெளியேறியுள்ளனர்.

அவர்களில் 09 பேர் கடற்படை பொது

பக்கம் 02 »

## இனிது ரகசியம் அல்ல!

நான் குறிப்பிடத்தக்க காலம் நீதிமன்றச் செய்தியாளராகக் கடமையாற்றியிருக்கிறேன். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல நீதிமன்ற அமர்வுகள் குறித்துச் செய்தி அறிக்கையிட்டிருக்கிறேன். சட்டத்துறையில் ஓரளவு

பக்கம் 02 »

# அமைச்சர் தொண்டமான் திடீரென்று காலமானார்!

## பெரும் சோகத்தில் மலையக மக்கள்



கொழும்பு, மே 27

மலையக மக்களின் உரிமைக்காகக் குரல்கொடுத்து வந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் (வயது 56) நேற்றிரவு திடீரெனக் காலமானார்.

கொழும்பு, பத்திரமுல்லையிலுள்ள வீட்டில் அவர் தங்கியிருந்த வேளை, நேற்றிரவு வீட்டிலிருந்து கீழே மயங்கி வீழ்ந்துள்ளார். ஆபத்தான நிலையில் தலங்கம வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் சேர்க்கப்பட்ட போதிலும் அங்கு உயிரிழந்துள்ளார்.

பக்கம் 02 »

## மாலையே அவரைச் சந்தித்தேன் மிகுந்த அதிர்ச்சி அடைகின்றேன்

### – இந்தியத் தூதுவர் அனுதாபம்



கொழும்பு, மே 27

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் துன்பகரமான திடீர் மறைவினால் மிகுந்த அதிர்ச்சி அடைகின்றேன். அவருக்கு எனது

பக்கம் 02 »

## சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு பாக். தூதுவர் திடீர் பயணம்



இலங்கை மக்களுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவு எப்போதும் தொடரும் என்று அந்த நாட்டுத் தூதுவர் மொகமட் சாத் அலிக், யாழ்ப்பாணத்தில் தெரி

பக்கம் 02 »

## ஆறுமுகத்தின் மரணச் செய்தி அறிந்தவுடன் வைத்தியசாலை பறந்தனர் அரசியல்வாதிகள்

### பிரதமர் மஹிந்தவும் விரைந்தார்



கொழும்பு, மே 27

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகம் தொண்ட

பக்கம் 02 »

## 137 பேருக்கு நேற்று கொரோனா தொற்று!

### 1,319 ஆக அதிகரித்தது மொத்தப் பாதிப்பு
### குவைத்திலிருந்து வந்த 219 பேருக்கு தொற்று

கொழும்பு, மே 27

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 137 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 11.30 மணியளவில் தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியவர்களின் எண்ணிக்கை 1,319 ஆக அதிகரித்துள்ளது.

அதற்கமைய நேற்று கொரோனா வைரஸ் தொற்றிய 137 பேர்

பக்கம் 02 »

### வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகைக்காக

## ஓகஸ்ட் 01 தொடக்கம் விமான நிலையத்தை திறக்க முன்மொழிவு!



கொழும்பு, மே 27

நாடு வழமை நிலைக்குத் திரும்பிவரும் நிலையில் ஓகஸ்ட் 01ஆம் திகதி முதல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக விமான நிலையத்தைத் திறப்பதற்கு கொரோனா ஒழிப்புச் செயலணி

பக்கம் 02 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரிச்சயமும் எனக்கு உண்டு.

இந்தப் பின்புலம் கொண்டுள்ள எனக்கு இப்போது நடைபெற்று வரும் ஒரு முக்கிய வழக்குத் தொடர்பாக ஒரு விடயம் விளங்கவில்லை.

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு மீதான வழக்குத் தான் அது.

வழக்கு இன்னும் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. வழக்கை விசா ரணைக்கு ஏற்பதா என்பது பற்றிய விசாரணைதான் இப்போது நடக்கின்றது.

ஏற்கனவே ஆறு முழு நாள்கள் விசாரணைகள் நடைபெற்று விட்டன. இன்னும் இரண்டு, மூன்று நாள்கள் இந்த விசாரணைகள் தொடரும் போல உள்ளது.

நேற்று ஆறாவது நாள் விசாரணை. கடந்த வெள்ளியன்று தனது பூர்வாங்க விவாதத்தை ஆரம்பித்த மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் இந்திக தேமுனி டி சில்வா நேற்றும் விவாதத்தைத் தொடர்ந்தார். அம்மணியின் விவாதம் இன்று காலையிலும் தொடருமாம்.

அதன் பின்னர் இடையீட்டு மனுதாரர்களாக மனுச் செய்திருக்கும் ஒரு டசின் மனுதார்களின் வாதங்களை நீதியரசர்கள் செவிமடுக்க வேண்டியிருக்கும்.

அதன் பின்னர் மனுதார்கள் தரப்பில் ஏழு மனுதார்களுக்கான தொகுப்புரையை ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் முன்னெடுப்பார். எதிர்மனுதார்களின் வாதத்துக்குத. தாம் பதிலளிப்பதற்குத் தமக்கு ஒரு முழு நாள் தேவை என்கின்றார் அவர்.

அதன்பின்னர் சட்டமா அதிபரில் தொடங்கி, தேர்தல் ஆணையாளர்கள் வரையான எதிர்மனுதாரரின் தொகுப்புரை.

அதன் பின்னர்தான் நீதிமன்றத்தின் முடிவு வெளியாகும்.

போகின்ற போக்கில் இந்த வாரத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் இது முடிகின்ற விடயம் மாதிரி எனக்குத் தெரியவில்லை.

மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்ற விடயத்துக்கு இவ்வளவு நுணுக்கமான – நீண்ட – விசாரணை தேவையா? இப்படி ஆராயப்பட வேண்டிய நுணுக்கமான விடயங்கள் இவ்விவகாரத்தில் உள்ளன என்றால் அது விசாரணைக்கு ஏற்றுக் கொள்ள வேண்டிய விவகாரம் அடங்கிய வழக்குத்தானே! அதை விசாரணைக்கு ஏற்று, இந்த விடயங்களை எல்லாம் மூல விசாரணையில் நடத்தலாமே? அதைவிட்டுவிட்டு வழக்கை விசாரணைக்கு ஏற்பதா என்ற கட்டத்தில் வைத்துக்கொண்டு இவ்வளவு ஆழமாக – நுட்பமாக – சென்று இந்த வழக்கை விசாரிக்கும் நோக்கம் என்ன? வழக்கை விசாரணைக்கு ஏற்காமல் பூர்வாங்க நிலையிலேயே முடித்துவிடுவதற்கான முன் ஆயத்தமா? – இப்படி எனக்குள் விளங்காத பல வினாக்கள்.

சரி, இந்த வழக்கை முன்னின்று நடத்தும் ஜனாதிபதி சட்டத்தணி சுமந்திரனிடமே நேரில் கேட்டு விடுவோமே என்று எண்ணி, சந்தித்துக் கேட்டேன்.

அவருக்கும் கூட அந்த விடயத்தின் பின்புலம் விளங்கவில்லைத்தான். எனினும் என் கேள்விகளில் – சந்தேகங்களில் – ஏதோ அர்த்தம் இருப்பதாகத் தான் அவரும் நினைக்கின்றார் போலும்.

எனினும் ஒருவிடயத்தைச் சுட்டிக்காட்டினார் அவர்.

கடந்த வருடம் நடைபெற்ற ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சில பிரபலங்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் இதேபோன்ற அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த வழக்குகளையும் இதே பிரதம நீதியரசர் கொண்ட ஆயம், இதேபோன்று அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதா என்பது பற்றிய பூர்வாங்க விசாரணையை ஒரு வாரம் கடந்தும் தொடர்ந்து ஆழமாக – நுணுக்கமாக – பரிசீலித்தது. அதன் பின்னர்தான் அந்த மனுக்களை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

உணர்வுபூர்வமான, முக்கியமான, அதிக கவனிப்புக்குரிய வழக்குகளில் இத்தகைய தெளிவோடுதான் அத்தகைய வழக்குகளை விசாரணைக்கு ஏற்பது என்பது இந்த ஆயத்தின் கருத்து நிலைப்பாடாக இருக்கலாம். அதைத் தவறு என்றும் கூறமுடியாது – என விளக்கினார் சுமந்திரன்.

அப்படித்தான் இருக்கும் என்று நம்புவோம்.

★ ★ ★

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டப்படுவதற்கான அழுத்தம் குறித்து இன்றைய பத்தியில் விவரிப்பேன் என்று குறிப்பிட்டிருந்தேன். எனினும் எனக்குக் கிடைத்த சில தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக அந்த விடயத்தை விவரிப்பதை ஓரிரு நாள்கள் தாமதிக்கிறேன். வாசர்கள் பொறுத்துக் கொள்வார்களாக!

–மின்னல்–

## சென்.பற்றிக்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வித்தார்.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சென்றார். பாடசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடியமையோடு மாணவர்களுக்காக விளையாட்டு உபகரணங்களையும் கையளித்தார்.

“எனக்கு கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நினைத்து நான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். கடந்த 20 வருடங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளேன்.

“இன்று வடக்கு மாகாண ஆளுநரைக் கூட நான் சந்திக்க முயற்சித்தேன். எனினும் அவர் கொழும்பில் இருப்பதால் சந்திக்க முடியவில்லை.

“நாங்கள் இலங்கையை நேசிக்கின்றோம். இலங்கை மக்களை நேசிக்கின்றோம். எனக்குத் தனிப்பட்ட ரீதியில் இலங்கை மக்களிடையே ஒரு விருப்பம் இருக்கின்றது.

“இலங்கை – பாகிஸ்தான் உறவை மேம்படுத்துவதற்காக நாம் இலங்கை மக்களுக்கு எம்மாலான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கின்றோம். அதன் முதல் கட்டமாகவே நான் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தேன். எமது உறவு தொடரும். இலங்கை மக்களுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான தொடர்பு எப்போதும் தொடரும்” –என்றார் பாகிஸ்தான் தூதுவர்.

## ஆறுமுகத்தின் மரணச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மான் நேற்றிரவு உயிரிழந்தமையை டுத்து அவரின் சடலம் தலங்கம வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

பிரதமர், அமைச்சர்மார் உள்ளிட்ட அரசியல்வாதிகள் நேற்றிரவு அங்கு படையெடுத்தனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பந்துல குணவர்தன, மஹிந்த அமரவீர மற்றும் முன்னாள் அமைச்சர்களான மனோ கணேசன், ரவி கருணாநாயக்க, மஹிந்தானந்த அளுத்கமகே ஆகியோரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முக்கியஸ்தர்களும், ஆதரவாளர்களும் அங்கு சென்றனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் அவரது உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. பூதவுடல் அஞ்சலிக்காக நாடாளுமன்றத்தில் வைக் கப்படும் என்றுஅரசதரப்புத்தகவல்கள்தெரிவித்தன.

## திகாரம்பரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சருமாகிய பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அவர் தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் திடீர் மறைவு செய்து அதிர்ச்சியைத் தருகின்றது. இவரது இழப்பானது மலையக மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் மறைவை அடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு இவர் புதிய தலைமை வகித்து, அமைச்சுப் பதவிகள் பெற்று, மலையக மக்களுக்குச் சேவையாற்றியுள்ளார்.

அரசியல் ரீதியாகக் கருத்து வேறுபாடுகள் ஆறுமுகன் தொண்டமானுக்கும் எனக்கும் இடையில் இருந்தபோதும் தனிப்பட்ட ரீதியில் எவ்வித கோபதாபங்களும் இருந்ததில்லை. அதனால் அவரது மறைவு கவலை அளிக்கின்றது. அரசியல் கட்சி பேதங்களை மறந்து ஆறுமுகம் தொண்டமானின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் மலையக மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மலையக மக்களுக்குத் தலைமை கொடுத்த தலைவர் மற்றும் அமைச்சர் என்ற அடிப்படையில் அரச மரியாதையுடன் இறுதிக் கிரியைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். மலையக மக்கள் கட்சி பேதமின்றி துயரில் பங்கெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் – என்று குறிப்பிட்டுள்ளார்.

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைத்தியசாலையிலும், 07 பேர் முல்லேரியா ஆதார வைத்தியசாலையிலும், 02 பேர் கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையிலும், மற்றுமொருவர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வந்தனர்.

அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று கிருமிகள் உடலில் இல்லை என்றுஉறுதிப்படுத்தப்பட்டதைத்தொடர்ந்து, அவர்கள் வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி, குணமடைந்த கடற்படையினரின் எண்ணிக்கை 332ஆக உயர்வடைந்துள்ளது எனவும் கடற்படை ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

304 கடற்படையினர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவர்களில் 55 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை பொது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் கடற்படை ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## மாலையே அவரைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆழ்ந்த அனுதாபங்கள்.

– இவ்வாறு இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்றிரவு ருவிட்டரில் பதிவிட்டுள்ளதாவது:–

இன்று (நேற்று) மாலை அவரைச் சந்தித்திருந்த நிலையில் இன்று (நேற்று) இரவு இந்தச் செய்தியை நம்ப முடியவில்லை. இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ச் சமூகத்தினதும் இலங்கையினதும் மதிப்புக்குரிய தலைவர் ஆறுமுகம் தொண்டமான். அவரது இழப்பு பேரிழப்பாகும்.

அவரது ஆத்மா சாந்திக்காகவும் இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பை அவரது குடும்பத்தினர் தாங்குவதற்கான பலத்துக்காகவும் பிரார்த்திக்கின்றேன் – என்று பதிவிட்டுள்ளார்.

## அரசுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராஜபக்ஷ, அவரின் மறைவு அரசுக் கும் மக்களுக்கும் குறிப்பாக மலையக மக்களுக்கும் பேரிழப்பு என்று அங்கு நின்ற ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

ஆறுமுகத்தின் பூதவுடல் நேற்றிரவு 11 மணியளவில் ஜயரத்ன மலர்ச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இறுதிக் கிரியை விவரங்கள் இன்று அறிவிக்கப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

## ஓகஸ்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியிடம் முன்மொழிந்துள்ளது.

ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இன்று வரை கொரோனா தொற்றுடைய எவரும் சமூகத்திலிருந்து இனம் காணப்படாமை நாடு அடைந்த வெற்றியாகும் என்று கொரோனா ஒழிப்புச் செயலணியின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாக் கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றி கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கொரோனா ஒழிப்பு செயலணி ஒன்றுகூடியது.

சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதிக்கும் செயற்பாடுகள் சர்வதேச மற்றும் உள்நாட்டு சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். ஏலவே திட்டமிடுவதன் மூலம் ஏனைய நாடுகளைப் பார்க்கிலும் முன்னிற்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. முன்னுரிமைகளை அறிந்து சுற்றுலா மற்றும் சுகாதாரத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளைக் கேட்டறிந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகள் அதிகமுள்ள பிரதேசங்களுக்கு முன்னுரிமையளித்து வெளிநாட்டு மொழிகளில் பயிற்சி பெற்ற சுற்றுலா பொலிஸ் பிரிவொன்றை அமைப்பதற்கும் ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர ஆகியோரும், கொரோனா ஒழிப்புச் செயலணியின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவரின் மறைவுச் செய்தி மலையக மக்களைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானுக்குப் பின்னர் இலங்கை மலையக மக்களின் உரிமைக்காகவும், இந்திய வம்சாவளி மக்களின் உரிமைக்காகவும் அவர் ஓயாது குரல் கொடுத்து வந்தார்.

1964ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி பிறந்த அவர் 56 வயதைப் பூர்த்தி செய்வதற்கு இன்னமும் 3 நாள்கள் இருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசியலுக்குப் பிரவேசித்த ஆறுமுகம் தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அப்போதைய தலைவரும் தமது பேரனாருமான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் பிரத்தியேக செயலாளராகச் செயற்பட்டார்.

1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்கிய தொண்டமான், 75 ஆயிரத்து 297 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

1999ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி சௌமியமூர்த்தி தொண்டமான் உயிரிழந்தமையையடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றார்.

1994ஆம் ஆண்டு முதல் இதுவரை நாடாளுமன்ற உறுப்பினராக இவர் பதவி வகித்தார். ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரு கட்சிகளின் ஆட்சிக் காலத்திலும் பல்வேறு அமைச்சுப் பதவிகளை அவர் வகித்துள்ளார்.

## 137 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் 17 பேர் குணமடைந்துள்ளனர்.

இலங்கையில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளிகளில் ஒரே நாளில் மிக அதிகளவானோர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று அடையாளம் 137 நோயாளிகளில் 129 பேர் குவைத்திலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் எனவும், 08 பேர் கடற்படையினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குவைத்திலிருந்து நாடு திரும்பி வந்தவர்களில் இதுவரை 219 பேர் கொரோனா நோயாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## காட்டுக்குள் தேன் எடுக்கச் சென்ற மாணவன் மரக்கிளை குத்திச் சாவு

திருகோணமலை மொரவெவவில் சம்பவம்

திருகோணமலை, மே 27

காட்டுக்குள்தேன்எடுக்கச்சென்ற மாணவன் மரக்கிளை உடம்பில் குத்தியதால்பரிதாபகரமாகஉயிரிழந்துள்ளான்.

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பன் மதவாச்சி காட்டுப்பகுதிக்குள் நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட்மாதம் நடை பெறவுள்ள உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது. நிலாவெளி கைலேஸ்வரன் மஹா வித்தியாலயத்தில் இவர் உயர்தரம் கற்பவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேன் எடுக்க சென்ற மூவரில் ஒருவரான குறித்த மாணவன் சுமார் 16 அடி உயரமான மரம் ஒன்றில் பிணமாக கிடந்ததாா் எனவும் 15,54 வயதுடைய, உயிரிழந்தவருடன் கூட சென்றவர்கள் காட்டில் வழிமாறிய நிலையில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை மூன்று மணியளவில் மரணவிசாரணை அதிகாரி எம் ரூமி மரணவிசாரணையை மேற்கொண்டார். சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# புதிய இந்தியத் தூதுவரை நேரில் சந்தித்த ஆறுமுகம்

## உயிரிழப்பதற்கு முன் நேற்று நடந்த இறுதிச் சந்திப்பு

கொழும்பு, மே 27

**இலங்கைக்கான இந்தியாவின் புதிய தூதுவர் கோபால் பாக்லேவை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்கள் நேற்றுப் பகல் சந்தித்துக் கலந்துரையாடினர்.**



அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா. குழுவில் நிதிச் செயலாளர் மருதபாண்டிரமேஷ், உபதலைவர் செந்தில் தொண்டமான், இளைஞர் அணி பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்திய அரசால் மலையக மக்களுக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் வீடமைப்பு திட்டம் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தில் குடிதண்ணீர், மின்சாரம் உட்பட உட்கட்டமைப்பு விடயங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது சம்பந்தமாகவும் பேசப்பட்டுள்ளது.

## வந்தாறுமூலையில் நேற்று முன்னாள் போராளி மரணம்

மட்டக்களப்பு – வந்தாறுமூலையில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த முன்னாள் போராளி ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் லெப்டினன்ட் கேணல் தரநிலையில் இருந்த இருந்த கோவிந்தன் சந்திரசேகர் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்

1987 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 55 வயதுடைய ராமு என்று அழைக்கப்படும் கோவிந்தன் சந்திரசேகர் நேற்றைய தினம் தனது இல்லத்தில் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் மருத்துவ பணியில் இருந்ததுடன் ஜெயந்தன் படையணியின் பிரிவு பொறுப்பாளராகவும் லெப்டினன்ட் கேணல் இரண்டாம் நிலை தளபதியாகவும் இருந்துள்ளார்.

யுத்தம் முடிவுற்ற பின்னர் 2011 ஆம் ஆண்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வீடு திரும்பியிருந்தார்.

அதன் பின்னர் அவர் ஸ்ரீ மஹா பெரிய தம்பிரான் ஆலய தலைவராகப் பணியாற்றி வந்துள்ளார்.

அவரது இறுதி கிரியைகள் வந்தாறுமூலையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளன.

இறுதிக் கிரியைகளில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஞானமுத்து ஸ்ரீநேசன், கோவிந்தம் கருணாகரன், சதாசிவம் வியாழேந்திரன், இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.






## அல்லாரையில் மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள, சாவகச்சேரி, அல்லாரை இராணுவ முகாமில் கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்தை அமைப்பதற்கு அந்த பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி - கச்சாய் வீதியில், அல்லாரை பகுதியில் அமைந்துள்ள 523வது பிரிகேட் தலைமையக முகாமில் தனிமைப்படுத்தல் நிலையத்தை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ள நிலையில், அந்த பகுதி குடியிருப்பாளர்கள், அல்லாரை இராணுவ முகாமுக்கு முன்பாக நேற்றுக் காலை போராட்டத்தில் பொது மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், அல்லாரை முகாமில் தனிமைப்படுத்தல் நிலையத்தை அமைக்கும் பணிகளை இடைநிறுத்துமாறு கோரி, சாவகச்சேரி பிரதேச செயலாளர், சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரிடமும், அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும், அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பு போராட்டத்துக்கும் மத்தியில், தனிமைப்படுத்தல் நிலையத்தை அமைக்கும் பணிகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

## மூடப்பட்ட நிதி நிறுவனத்திற்கு முன்னால் நிதி வைப்பாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

நீர்கொழும்பில் எதிர்ப்பு நடவடிக்கை






நீர்கொழும்பில் அமைந்துள்ள 'தி பினான்ஸ்' நிறுவனத்திற்கு முன்பாக வாடிக்கையாளர்களான நிதி வைப்பாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

த பினான்ஸ் கம்பனி நிறுவனம் கடந்த 22 ஆம் திகதி மத்திய வங்கியினால் மூடப்பட்டது.

இந்த நிதி நிறுவனம் நஷ்டத்தை எதிர் நோக்கியதால் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் நேற்று நீர்கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ள நிதி நிறுவனத்தின் முன்பாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 10 வருட காலமாக மத்திய வங்கியினால் த பினான்ஸ் கம்பனி நிதி நிறுவனம் நிர்வகிக்கப்படுவதாகவும் மத்திய வங்கியினால் முன்னறிவித்தலின்றி கடந்த 22 ஆம் திகதி நாட்டில் உள்ள அனைத்து கிளைகளும் மூடப்பட்டுள்ளன எனவும் வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது நிதி வைப்புகளுக்கு சில மாத காலமாக வட்டி வழங்கப்படவில்லை எனவும் வைப்பாளர்களின் நிதியை பாதுகாப்பதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## அதிகாரிகளின் தலையெழுத்து

**ஆட்சி அதிகாரத்துக்கு வரும் அரசியல்வாதிகள், அந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு நடத்தும் தர்பாருக்கெல்லாம் பின்நாள்களில் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் அதிகாரிகள் தான்.**

**கடந்த காலத்தில் அதிகாரத்துக்கு வந்தோர் இழைத்த தவறுகளுக்காக, அவர்களின் உத்தரவுகளை நிறைவேற்றிய அதிகாரிகள் பலிக்கடாவாக்கப்பட்டமையை நாடு பல தடவைகள் கண்டிருக்கின்றது.**

**அத்தகைய நெருக்கடி ஒன்று இப்போது வந்திருக்கின்றது.**

**நாடாளுமன்றம் ஜனாதிபதியால் கலைக்கப்பட்ட சமயத்தில், அக்காலத்துக்குரிய வரவு – செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லையானால் அந்தக் காலத்துக்குரிய செலவினங்களை ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் முன்னெடுக்கவும், புதிய நாடாளுமன்றம் கூடியதும், கடந்த காலத்துக்கான வரவு – செலவை அங்கீகரிக்கவும் அரச மைப்பில் ஏற்பாடுகள் உண்டு.**

**இந்த ஏற்பாடு, நாடாளுமன்றம் வரவு – செலவு ஏற்பாட்டைச் செய்யாமலிருந்தால்தான் செல்லுபடியாகும். ஆனால், மார்ச் 2ஆம் திகதி ஜனாதிபதியால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம், அதற்கு முன்னரே இவ்வாண்டுக்கான – அதாவது ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30ஆம் திகதி வரையான காலத்துக்குரிய – இடைக்கால கணக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தது.**

**அப்படி ஒரு கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதால், அதற்கு மேலதிகமாக தம்முடைய நேரடிக் கண்காணிப்பில் வரவு – செலவினை ஜனாதிபதி முன்னெடுக்க முடியுமா என்ற குழப்பம் – சட்ட முரணிலை – இப்போது ஏற்பட்டுள்ளது.**

**இதுபோன்ற ஒரு நெருக்கடி ஏற்படுமிடத்து – அதாவது நாட்டின் வரவு, செலவுக்கான திட்ட அங்கீகாரம் நாடாளுமன்றத்தினால் வழங்கப்படாத நிலையில் – நாடாளுமன்றம் கலைக்கப்படுமானால், புதிய நாடாளுமன்றம் கூடும் வரையான மூன்று மாத காலத்துக்கு ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் வரவு – செலவை முன்னெடுக்க முடியும் என்று அரசமைப்பின் 150 (3) பிரிவு கூறுகின்றது.**

**இன்றைய நெருக்கடி நிலையில் நாட்டின் வரவு – செலவை இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விசேட அதிகாரத்தின் மூலம் ஜனாதிபதி பிரயோகித்து முன்னெடுக்கலாம் என்று வைத்தாலும் கூட, அதுவும் இன்னும் ஆறு நாள்களுக்குத்தான் என்று சட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.**

**நாடாளுமன்றம் ஜனாதிபதியால் கலைக்கப்பட்டு புதிய நாடாளுமன்றம் கூடுவதற்கான கால எல்லை காலாவதியாகும் மூன்று மாதங்கள் வரை மட்டுமே ஜனாதிபதியின் வழிகாட்டுதலில் இப்படி நாட்டின் வரவு – செலவை முன்னெடுக்க முடியும் என இந்தப் பிரிவு மிகத் தெளிவாகக் கூறுகின்றது.**

**தற்போதைய நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்து எதிர்வரும் சனிக்கிழமையுடன் அந்த மூன்று மாதங்கள் கால அவகாசம் முடிவடைகின்றது.**

**அதற்குப் பின் நாட்டின் வரவு – செலவை நிதி அமைச்சு எப்படிக் கொண்டு நடத்தப்போகின்றது? அதற்கான சட்ட அங்கீகாரம் உண்டா? ஜனாதிபதி தரப்பும், காபந்து அரசும், அதன் அமைச்சரவையும் கூறுகின்றன என்பதற்காக, சட்டத்தில் அனுமதிக்கப்படாத முறையில் நிதி விவகாரங்களை நிதி அமைச்சு கொண்டு நடத்தலாமா? அப்படிக் கொண்டு நடத்தினால், அதனால் எதிர்காலத்தில் வரக்கூடிய சட்டச் சிக்கல்கள், கடப்பாடுகள், பொறுப்புகளுக்குப் பதில் கூற வேண்டியவர்கள் யார்? – என்றெல்லாம் பல்வேறு கேள்விகள் எழுகின்றன.**

**ஏற்கெனவே இந்த விடயங்கள் தொடர்பில் அதிகாரிகள் வர்க்கத்தை எழுத்தில் எச்சரிக்கும் நடவடிக்கைகளை பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்துவிட்டது.**

**போதாக்குறைக்கு நாடாளுமன்றம் அங்கீகரித்த மட்டத்தைத் தாண்டி அரசு கடன்களைப் பெற்றிருப்பது பெரும் குற்றம் என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது.**

**உரிய சட்ட ஏற்பாடுகள் இல்லாத நிலையில் – அல்லது சட்டத்தில் காட்டிய வழிமுறைகளைத் தாண்டி – நாட்டின் நிதிக் கொடுக்கல், வாங்கல் முன்னெடுக்கப்படுமாயின் அதற்கான பொறுப்பை நிதி அமைச்சின் செயலாளரும், திறைசேரியின் தலைவரும்தான் ஏற்க வேண்டியிருக்கும், அவர்களை அந்தத் திசையில் செயற்படுவதற்குத் தூண்டிய அரசியல் அதிகாரவர்க்கம் தப்பிவிடும். பாவம், அதிகாரிகள்தாம் மாட்டிக் கொள்வார்கள்.**

**இதுதான் அதிகாரிகளின் தலையெழுத்துப் போலும்.**

# அரசமைப்பிற்கு ஏற்பாடுகளுக்கு முரணாக அரச செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன

## கணக்காய்வாளர் நாயகத்துக்கு சஜித் அணி சுட்டிக்காட்டு

அரச செலவுகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை அரசமைப்பிற்கு முரணான வகையில் கையளித்தல் மற்றும் கடன் பெறல் சந்தர்ப்பங்கள் தொடர்பில் விளக்கம் கோரி கணக்காய்வாளர் நாயகம் டபிள்யு.பி.சி விக்ரமரத்னவிற்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இந்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது.

அரச செலவுகளுக்கான அதிகாரத்தை அரசமைப்பிற்கு முரணான வகையில் கையளித்தல் மற்றும் கடன்பெறல் சந்தர்ப்பங்கள் தொடர்பில் சுட்டிக்காட்ட விரும்புகிற அதேவேளை -

2020ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு நாடாளுமன்றத்தினால் தேர்தலை அறிவிப்பது வரையான செலவுகள் மற்றும் யோசனையொன்று ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் தீர்மான யோசனையொன்றை செல்லுபடியற்றதாக்கும் அதிகாரம் திறைசேரி செயலாளருக்கு இல்லை.

அதேபோன்று செலவுகளுக்குப் பொறுப்பான நியமனப் பரிந்துரையும் அரசமைப்பிற்கு முரணானதாகவே இடம்பெற்றுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதியுடன் கடன் பெறுவதற்காக நாடாளுமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்ட காலப்பகுதி முடிவடைந்துள்ளதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீண்டும் நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கான திகதியொன்று நிர்ணயிக்கப்படாத நிலையில், அரசமைப்பின் 150ஆவது பிரிவின் 3ஆவது பகுதியின் கீழ் செயற்படுத்த முடியாது எனவும், ஏப்ரல் 30ஆம் திகதியின் பின்னர் அரச செலவுகளை மேற்கொள்வதற்கான உத்தியோகபூர்வ அதிகாரம் இல்லாமல் போயுள்ளதாகவும் சஜித் அணியின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடாளுமன்றத்தின் ஊடாக 721 பில்லியன் ரூபா கடன் பெறுவதற்கு அனுமதி பெறப்பட்டு, பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டதாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


எனினும் இக்காலப்பகுதியில் அரசாங்கம் 822 பில்லியன் ரூபா கடனைப் பெற்றிருப்பதாகவும், அதாவது அனுமதியளிக்கப்பட்ட தொகையை விடவும் அதிகளவில் கடன்பெறப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான முரண்பாட்டுத் தீர்மானங்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட வேண்டுமென கேட்டுக்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தி கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் அழிந்து விட்டதாக கருதப்பட்ட கரும்புலி கண்டுபிடிப்பு

## லக்ஸபான தோட்டத்தில் உயிருடன் மீட்பு





மஸ்கெலியா நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஸபான தோட்டத்தில் வாழமலை பகுதியில், நேற்று காலை கம்பி வலையில் சிக்கிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட கரும்புலி, கடும் போராட்டத்துக்கு மத்தியில் உயிருடன் பிடிக்கப்பட்டு, ரந்தெனிகல மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

காட்டுப்பன்றிகளிடமிருந்து மரக்கறி உற்பத்தியை பாதுகாப்பதற்காக போடப்பட்டிருந்த கம்பி வலையிலேயே, 7 வயதுடைய 6 அடி நீளமுடைய ஆண் கரும்புலி நேற்று அதிகாலை சிக்கியுள்ளது.

இது தொடர்பில் தோட்ட மக்கள் பொலிஸாருக்கு அறிவித்திருந்தனர். அதன் பின்னர் வனஜீவராசி திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த அதிகாரிகள், கரும்புலியை உயிருடன் மீட்பதற்காக மிருக வைத்திய பிரிவினர் உதவி கோரப்பட்டுள்ளது. இதன்படி சம்பவ இடத்துக்கு மிருக வைத்தியர்கள் விரைந்தனர்.

கம்பி வலையில் சிக்கியதால் காயம் ஏற்பட்டிருந்த கரும்புலியை கடும் சிரமத்துக்கு மத்தியில், மயக்க ஊசி செலுத்தி அதிகாரிகள் மீட்டனர். சம்பவ இடத்தில் வைத்தே அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் பின்னர் பாதுகாப்பான முறையில் ரந்தெனிகல மிருக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கரும்புலி பூரணமாக குணடைந்த பின்னர் வனத்தில் விடுவிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இத்தோட்டத்தில் கரும்புலி நெடுநாளாக நடமாடி வந்துள்ளது.



அத்துடன் நாய், ஆடு, கோழி என்பவற்றை வேட்டையாடி உட்கொண்டுள்ளதுடன், மனிதர்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வந்தது.

இன்னும் சில புலிகள் இருக்கலாம். எனவே, அவற்றிடமிருந்து தம்மையும் கால்நடைகளையும் பாதுகாப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இலங்கையில் அழிந்துவிட்டதாக கருதப்பட்ட கரும்புலி இனம் கடந்த ஜூன் 20 ஆம் திகதி மஸ்கெலியாவில் கண்டு பிடிக்கப்பட்டது. அந்த இனத்தை சேர்ந்த அரியவகையான புலியொன்றே இன்று சிக்கியுள்ளது. இது பாதுகாக்கப்பட வேண்டிய விலங்கினம் என்று வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கட்டுப்பாடுகளை முழுமையாக தளர்த்தியது ஜப்பானிய அரசு!

ஜப்பானில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நடைமுறையில் இருந்த தேசிய அவசரநிலை தற்போது முழுவதும் தளர்த்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 7 முதல் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. தொடக்கத்தில் 7 மாகாணங்களில் இருந்த ஊரடங்கு ஏப்ரல் 16 ஆம் திகதி நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.

ஊரடங்கு காரணமாக பள்ளிகள், கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டன. உணவு விடுதிகள், வணிக நிறுவனங்கள் என அனைத்தும் மூடப்பட்டன.

இதற்கிடையில், கடந்த சில வாரங்களாக ஜப்பானில் கொரோனா வைரஸ் பரவு வேகம் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, அந்நாட்டில் மொத்தம் 16 ஆயிரத்து 581 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 830 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று நாடு முழுவதுமே மொத்தம் 31 பேருக்குத்தான் புதிதாக வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அந்த நாட்டில் வைரஸ் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தலைநகர் டோக்கியோவில் செய்தியாளர்களைச் சந்தித்த ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே, நாடு முழுவதும் நடைமுறையில் உள்ள அவசர நிலை பிரகடனத்தை முழுவதும் முடிவுக்கு கொண்டுவருவதாகத் தெரித்தார். மேலும், அனைத்து கட்டுப்பாடுகளையும் தளர்த்தினார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், "நாடு முழுவதும் நடைமுறையில் உள்ள அவசரநிலை பிரகடனம் முடிவுக்கு வருகிறது. ஊரடங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தி ஒன்றரை மாதத்திற்கு மேலாகியுள்ளது. தற்போது நாம் நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்து விட்டோம்.

அவசரநிலையை தளர்த்துவதால் வைரஸ் முற்றிலும் அழிந்து விட்டது என அர்த்தம் அல்ல. கொரோனாவுக்கு எதிரான நமது போராட்டம் தொடரும்" என்றார்.

# தனிமைப்படுத்தல் இல்லை சுற்றுலாவிகளே வாருங்கள்!

## கூவி அழைக்கின்றது ஸ்பெயின் நாடு



ஸ்பெயின் நாட்டிற்கு ஜூலை முதலாம் திகதியில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளுக்கு 14 நாள் தனிமைப்படுத்தல் தேவையில்லை என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

சுற்றுலாத்துறையில் உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாகத் திகழும் ஸ்பெயினுக்கு, ஆண்டு தோறும் சுமார் 8 கோடி பேர் சுற்றுலா செல்கின்றனர். ஸ்பெயின் நாட்டின் ஜிடிபியில் 12 சதவீதம் சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கிறது. 2.6 மில்லியன் வேலைவாய்ப்பை மக்கள் பெற்று வருகிறார்கள்.

கேனரி மற்றும் பலேரிக் தீவுக் கூட்டங்கள் கிட்டத்தட்ட சுற்றுலாப் பயணிகளை மட்டுமே நம்பியுள்ளன. சுற்றுலா சீசன் தொடங்கும் நேரத்தில் கொரோனா வைரஸ் தொற்று ஸ்பெயினை தாக்கியதால் சுற்றுலாத்துறை முற்றிலும் முடங்கிப் போனது. மார்ச், ஏப்ரல் என இரண்டு மாதங்கள் சுனாமி போன்று கொரோனா சுழற்றி அடித்தது. இதில் 26 ஆயிரத்து 834 பேர் உயிரிழக்க நேரிட்டது.

தற்போது ஸ்பெயின் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் குறைந்துள்ளதால் படிப்படியாக கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருகின்றன. கடந்த வாரத்தில் சில இடங்களில் பார்கள், மியூசியம், தேவாலயங்கள் போன்றவற்றை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நாட்டில் மிகவும் அதிக பாதிப்புக்குள்ளான மாட்ரிட், பார்சிலோனா போன்ற நகரங்களில் கூட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருகின்றன. லா லிகா கால்பந்து லீக் போட்டிகள் ஜூன் 8ஆம் திகதியில் இருந்து மீண்டும் தொடங்க இருக்கின்றன.

இந்த நிலையில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் ஜூலை முதலாம் திகதியில் இருந்து ஸ்பெயின் நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எந்தவித தனிமைப்படுத்தல் நடைமுறையையும் பின்பற்ற வேண்டாம் என அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ஏற்கனவே கடந்த வாரம், "வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஜூலையில் இருந்து வரவேற்க ஸ்பெயின் தயாராக இருக்கின்றது. ஆனால், கட்டாயம் இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தல் நடைமுறையை கடைபிடிக்க வேண்டும் என்று சொல்லமாட்டேன்" என்று தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் உயிரிழப்பு படிப்படியாகக் குறைகிறது

அமெரிக்காவில் கொரோனா தாக்குதலுக்கு நேற்று 505 பேர் உயிரிழந்துள்ளனர். இது கடந்த 2 மாதங்களில் பதிவான மிகக்குறைவான உயிரிழப்பு எண்ணிக்கை ஆகும்.

உலகம் முழுவதும் தற்போதைய நிலவரப்படி 55 லட்சத்து 87 ஆயிரத்து 129 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் பரவியவர்களில் 28 லட்சத்து 73 ஆயிரத்து 655 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 53 ஆயிரத்து 167 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா பரவியவர்களில் 23 லட்சத்து 65 ஆயிரத்து 645 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். ஆனாலும், வைரஸ் தாக்குதலுக்கு உலகம் முழுவதும் இதுவரை 3 லட்சத்து 47 ஆயிரத்து 861 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் நோய்த் தாக்கமும் உயிரிழப்பும் மிக அதிகமாக உள்ளது. 2 மாதங்களுக்கு பின்னர் தற்போது அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி, அந்நாட்டில் 17 லட்சத்து 6 ஆயிரத்து 226 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், கொரோனா தாக்குதலுக்கு இதுவரை 99 ஆயிரத்து 805 பேர் உயிரிழந்துள்ளனர். குறிப்பாக நேற்று (மே 25) மட்டும் 505 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2 மாதங்களுக்கு பின்னர் முதல் முறையாக அங்கு வைரசுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த மார்ச் 29 ஆம் தேதி அமெரிக்காவில் கொரோனாவுக்கு 497 பேர் பலியாகினர். அதன் பின்னர் அங்கு வைரசுக்கு தினமும் பலியாவோர் எண்ணிக்கை ஆயிரம் முதல் 2 ஆயிரம் என்ற கணக்கில் இருந்தது.

ஆனால், நேற்று (மே 25) அமெரிக்காவில் கொரோனாவுக்கு 505 பேர் உயிரிழந்துள்ளனர். இது கடந்த இரண்டு மாதங்களில் பதிவான ஒருநாள் கணக்கின் மிகக்குறைவான பலி எண்ணிக்கையாகும்.

இந்த விவரங்களின் மூலம் அமெரிக்காவில் கொரோனா வைரசின் வீரியம் படிப்படியாக குறைந்து வருகிறது என்ற தகவல் வெளியாகி வருகிறது.

## பிரேஸில் நாட்டவர் அமெ.வுக்குள் நுழைவதற்குத் முழுத் தடை விதிப்பு

பிரேசில் நாட்டில் இருந்து வருகிறவர்கள் அமெரிக்காவில் நுழைவதற்கு வெள்ளை மாளிகை அதிரடியாக தடை விதித்துள்ளது.

உலகிலேயே கொரோனா வைரஸ் தொற்றுக்கு அதிகளவில் ஆளானோர் பட்டியலில் பிரேசில் 2ஆவது இடத்தை பிடித்துள்ளது. நேற்று மதிய நிலவரப்படி அங்கு 3 லட்சத்து 65 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று இருப்பதாகவும், 22 ஆயிரத்து 700இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பலனின்றி இறந்துள்ளனர் எனவும் அமெரிக்காவின் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக கொரோனா தரவு மையம் கூறுகிறது.

இந்த நிலையில் பிரேசில் நாட்டில் இருந்து வருகிறவர்கள் அமெரிக்காவில் நுழைவதற்கு வெள்ளை மாளிகை அதிரடியாக தடை விதித்துள்ளது.

இதையொட்டி வெள்ளை மாளிகை விடுத்துள்ள அறிக்கையில், வெளிநாட்டினரின் நுழைவை தடுத்து நிறுத்துவதின் மூலம் நமது நாட்டைப் பாதுகாக்க ஜனாதிபதி தீர்க்கமான நடவடிக்கை எடுத்துள்ளார். அதன்படி பிரேசிலில் சமீபத்தில் 14 நாள்கள் இருந்த வெளிநாட்டினர் அமெரிக்கா வர பயண தடை விதிக்கப்படுகிறது என கூறப்பட்டுள்ளது.

# கொரோனா உயிர் காப்பு கருவியிலும் ஊழல் பொலிவிய அமைச்சர் சிறைக்குள் அடைப்பு!

கொரோனா சிகிச்சையில் முக்கிய உயிர் காப்பு கருவியாக இருக்கும் வென்டிலேட்டர் வாங்கியதில் ஊழலில் ஈடுபட்ட பொலிவியா நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சருக்கு 3 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

உலகையே உலுக்கு வரும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 3 லட்சத்து 47 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கிடையில் கொரோனா வைரஸ் பரவியவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் போது வென்டிலேட்டர் எனப்படும் செயற்கை சுவாசக்கருவி மிகவும் முக்கியமான மருத்துவ உபகரணமாக செயல்பட்டு வருகிறது.

கொரோனா வேகமாக பரவி வருவதால் வென்டிலேட்டரின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ஆகையால், உலகின் பல்வேறு நாடுகள் வென்டிலேட்டர் உற்பத்தி செய்யும் நாடுகளிடமிருந்து அதை கொள்முதல் செய்ய தீவிரம் காட்டி வருகின்றன.

தென் அமெரிக்க நாடான பொலிவியாவிலும் கொரோனா பரவத்தொடங்கியுள்ளது. தற்போதைய நிலவரப்படி, அந்த நாட்டில் 6 ஆயிரம் பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா தாக்குதலுக்கு அங்கு இதுவரை 250 பேர் உயிரிழந்துள்ளனர்.

நிலைமையைச் சமாளிப்பதற்காக கொரோனா சிகிச்சையின் அங்கமான செயற்கை சுவாசக் கருவி எனப்படும் வென்டிலேட்டரை ஸ்பெயினிடம் இருந்து வாங்க பொலிவியா முடிவு செய்தது. இதற்காக முதல் கட்டமாக 170 வென்டிலேட்டர்கள் வாங்குவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் படி வென்டிலேட்டர்கள் கொள்முதலின் மொத்த மதிப்பு 5 மில்லியன் டொலர்கள் ஆகும். மேலும், சராசரியாக ஒரு வென்டிலேட்டருக்கு தலா 27 ஆயிரத்து 683 டொலர்கள் என்ற விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த கொள்முதல் அந்நாடு சுகாதாரத்துறை மந்திரி அமைச்சர் நவஜென்ஸ் தலைமையில் நடைபெற்று பணமும் ஸ்பெயின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், ஸ்பெயின் நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட வென்டிலேட்டர்கள் உலக சுகாதார அமைப்பின் தர நிர்ணய அளவுகோலைப் பூர்த்தி செய்யவில்லை என்ற அதிர்ச்சி தகவல் வெளியானது.

மேலும், வென்டிலேட்டரின் உண்மை மதிப்பு 7 ஆயிரத்து 194 டொலர்கள் என்பதும் உண்மையான சந்தை மதிப்பை விட பல மடங்கு அதிக விலைக்கு பொலிவிய அரசு வென்டிலேட்டர்களை கொள்முதல் செய்திருப்பதையும் அந்நாட்டு ஊடகங்கள் கண்டுபிடித்தன.

இந்த தகவல் வெளியானதையடுத்து அந்நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, வென்டிலேட்டர் கொள்முதலுக்கு தலைமை ஏற்ற சுகாதாரத்துறை அமைச்சர் மார்சிலே நவஜென்சின் பதவியை அதிபர் பறித்தார். மேலும், ஊழல் செய்த குற்றத்திற்காக நவஜென்ஸ் மீது வழக்குப்பதிவு செய்த பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

இந்த ஊழல் தொடர்பாக அந்நாட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. விசாரணையின் முடிவில் மார்சிலே நவஜென்ஸ் வென்டிலேட்டர் வாங்குவதில் ஊழல் செய்தது நிரூபணம் ஆனது.

இதையடுத்து வென்டிலேட்டர் கொள்முதலில் ஊழல் செய்த குற்றத்திற்காக நவஜென்சுக்கு 3 மாதங்கள் சிறை தண்டனை விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியது.

இந்த விவகாரத்தில் பொலிவியா முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் மார்சிலே நவஜென்ஸ் மற்றும் அவருக்கு உதவி செய்த அதிகாரிகள் உள்பட அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்

# இரு வேறு தீ விபத்துக்களில் 250 குடிசைகள் தீக்கிரையாகின



இந்தியத் தலைநகர் டெல்லியில் 2 இடங்களில் ஏற்பட்ட கடும் தீ விபத்தில் சுமார் 250 குடிசைகள் எரிந்து சாம்பலாகின. டெல்லியில் நேற்று அதிகாலை 2 இடங்களில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

முதலில் டெல்லி வடமேற்கு பகுதியில் உள்ள கேசவபுரத்தில் காலணி தயாரிக்கும் தொழிற்சாலையில் திடீர் தீவிபத்து ஏற்பட்டது. அந்தத் தொழிற்சாலை முற்றிலுமாக பற்றி எரிந்தது.

இதை அறிந்ததும் 15க்கும் மேற்பட்ட தீயணைப்பு வண்டிகள் அங்கு சென்று தீயை அணைத்தனர். அந்த தொழிற்சாலையில் எப்படி தீப்பிடித்தது என்று விசாரணை நடந்து வருகிறது.

இதற்கிடையே டெல்லி துக்ளக்பாத் பகுதியில் உள்ள குடிசைகளிலும் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. நேற்றுமுன் தினம் நள்ளிரவில் மக்கள் அயர்ந்து தூங்கிகொண்டிருந்த நிலையில் ஒரு குடிசையில் ஏற்பட்ட தீ மளமளவென மற்ற குடிசைகளுக்கும் பரவியது.

இதனால் குடிசையில் தூங்கி கொண்டிருந்தவர்கள் அலறி அடித்தபடி வெளியேறினார்கள். இதுபற்றி தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் அங்கு விரைந்தனர். 28 வண்டிகளில் வந்த அவர்கள் அந்த குடிசை பகுதி முழுவதும் பரவிய தீயை அணைத்தனர்.

என்றாலும் சுமார் 250 குடிசைகள் தீயில் எரிந்து சாம்பலாகி விட்டன. நேற்று அதிகாலை தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

# ஜூலை மாதம் முதல் பாடசாலைகளை திறக்கலாம் என டெல்லிக்கு பரிந்துரை

இந்தியாவில் ஜூலை முதலாம் திகதி முதல் பாடசாலைகளைத் திறக்கலாம் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பச்சை மற்றும் ஆரஞ்சு மண்டலங்களில் உள்ள பள்ளிகளில் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை கோடை விடுமுறைக்கு பின்பு ஜூலை மாத மத்தியில் திறக்கலாம் என்று மத்திய அரசுக்கு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி சபைக் குழு பரிந்துரைத்துள்ளது.

கொரோனா வைரஸ் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இதனால் பள்ளிகள் அனைத்தும் மூடப்பட்டு உள்ளன.

சில பள்ளிகள் ஆன்லைன் மூலம் மாணவர்களுக்கு பாடம் கற்பித்து வருகின்றன. இதற்கிடையே பள்ளிகளை மீண்டும் எப்போது திறப்பது என்பது தொடர்பாக மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

இது தொடர்பாக தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் குழு சார்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்தக் குழு தனது அறிக்கையை மத்திய மனித வள மேம்பாட்டு துறையிடம் அளித்துள்ளது.

அதில், பச்சை மற்றும் ஆரஞ்சு மண்டலங்களில் உள்ள பள்ளிகளில் 8 முதல் 12 ம் வகுப்பு வரை கோடை விடுமுறைக்கு பின்பு ஜூலை மாத மத்தியில் திறக்கலாம் என்று பரிந்துரைத்துள்ளது.

மேலும் ஒவ்வொரு வகுப்பிலும் மூன்றில் ஒரு பங்கு மாணவர்களை மட்டுமே அனுமதிக்கலாம் என்றும், தனி மனித இடைவெளி பராமரித்து பள்ளிகளை ஷிப்டு முறையில் இயக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

# கேரள தாதியர் 200 பேர் மராட்டியில் ராஜினாமா

மராட்டிய மாநிலம் மும்பை, புனே உள்ளிட்ட நகரங்களில் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றி வந்த கேரளாவை சேர்ந்த சுமார் 200 தாதியர்கள் கடந்த சில நாட்களில் ராஜினாமா செய்துள்ளனர்.

கொரோனாவுக்கு எதிரான போரில், நர்சுகள் உள்ளிட்ட மருத்துவ பணியாளர்கள் முக்கிய பங்கு வகித்து வருகிறார்கள். இதற்கிடையே, மேற்கு வங்காள மாநில வைத்தியசாலைகளில் சமீபத்தில் 600 க்கு மேற்பட்ட தாதியர்கள் ராஜினாமா செய்து, தங்கள் சொந்த மாநிலங்களுக்கு திரும்பினர்.

இந்நிலையில், மராட்டிய மாநிலம் மும்பை, புனே உள்ளிட்ட நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் பணியாற்றி வந்த கேரளாவை சேர்ந்த சுமார் 200 தாதியர்கள் கடந்த சில நாட்களில் ராஜினாமா செய்துள்ளனர். அத்துடன், அவர்கள் கேரளாவுக்கு திரும்பி சென்று விட்டனர். அவர்கள் ராஜினாமாவுக்கான காரணமா வெளியிடப்படவில்லை.

இருப்பினும், சொந்த ஊரை பிரிந்திருக்கும் ஏக்கம், முதலாளி மீதான அதிருப்தி ஆகியவை காரணமாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

# 2.4 லட்சம் திருப்பதி லட்டுக்கள் ஒரே நாளில் விற்றுத் தீர்த்தன!

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தின் 12 மாவட்டங்களில் ஒரே நாளில் 2.4 லட்சம் லட்டுகள் விற்பனையாகியுள்ளன. இதனால் கூடுதலாக 2 லட்சம் லட்டுகளை அனுப்ப தேவஸ்தானம் ஏற்பாடு செய்து வருகிறது.



கொரோனா ஊரடங்கு காரணமாக ஏழுமலையான் கோவிலில் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதிக்கப்படவில்லை.

இதனால் ஏழு மலையானின் பிரசாதமான லட்டுகள் எங்களுக்கு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று பக்தர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதனை ஏற்று ரூ.50 மதிப்புள்ள ஒரு லட்டு பிரசாதத்தின் விலையை பாதியாக குறைத்து ரூ.25க்கு விற்பனை செய்ய தேவஸ்தான நிர்வாகம் முடிவு செய்தது.

அதன்படி ஆந்திரா முழுவதும் குண்டூர் தவிர்த்து 12 மாவட்ட தலைநகரங்களில் லட்டு பிரசாத விற்பனையை தேவஸ்தானம் நேற்று தொடங்கியது. குண்டூருக்கான பங்கு லட்டு விற்பனை விஜய வாடாவுக்கு மாற்றப்பட்டது.

நேற்று ஒரே நாளில் 2.40 லட்சம் லட்டுகள் விற்பனையாகியுள்ளன. இதனால் கூடுதலாக 2 லட்சம் லட்டுகளை அனுப்ப தேவஸ்தானம் ஏற்பாடு செய்து வருகிறது.

மாநில அரசுகளின் அனுமதி கிடைத்தவுடன் தமிழகத்துக்கு 1 லட்சம் லட்டுகளையும், தெலுங்கானாவுக்கு 50 ஆயிரம் லட்டுகளையும் அனுப்ப தேவஸ்தானம் ஆலோசித்து வருகிறது.

# எல்லையில் சீனப்படைகள் குவிப்பு; பிரதமர் மோடி அவசர ஆலோசனை



இந்தியா – சீனா இடையே எல்லைப் பிரச்சினை நீடித்து வருகிறது. எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் இரு நாடுகளின் ராணுவமும் உள்கட்டமைப்புகளை மேற்கொள்ளும்போது அவ்வப்போது பதற்றம் உருவாகிறது.

கடந்த 5 ஆம் திகதி லடாக்கில் உள்ள பாங்காங் ஏரி பகுதியில் இந்திய, சீன ராணுவ வீரர்களிடையே மோதல் ஏற்பட்டது. கைகலப்பில் ஈடுபட்டமையுடன், கம்புகள் மற்றும் கற்களாலும் தாக்கினர். இதில் பலர் காயமடைந்தனர்.

பின்னர் அதிகாரிகள் பேச்சு நடத்தியமையையடுத்து மோதல் முடிவுக்கு வந்தது. இதேபோல் கல்வான் பள்ளத்தாக்கிலும் மோதல் போக்கு நீடிக்கிறது. ஆனால் பதற்றத்தை தணிக்க கொமாண்டர் நிலை அதிகாரிகளிடையே நடத்தப்பட்ட பேச்சில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

தற்போது லடாக் எல்லையை ஒட்டி உள்ள பாங்காங் ஏரி, கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் சீனப்படைகள் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளன. தற்காலிக கூடாரங்களை அமைத்து, சாலை போடும் பணிகளை தொடங்கி உள்ளனர். பதுங்கு குழிகளை அமைக்கும் நோக்குடன் கனரக இயந்திரங்களை கொண்டு வந்திருக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவும் அங்கு படைகளை குவித்து வருகிறது. சீன ராணுவத்தை விட அதிக எண்ணிக்கையில் வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில் இந்திய பிரதமர் மோடி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், முப்படைத் தளபதி பிபின் ராவத் உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

# நாளொன்றுக்கு 3 லட்சம் முகக் கவசங்கள் உற்பத்தி

இந்தியாவில் நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு கவச உடை மற்றும் முக கவசங்கள் எண்ணிக்கை தலா 3 லட்சமாக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

பாதுகாப்பு கவச உடைகளின் தரம் குறித்து சில ஊடகங்களில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. அவை மத்திய அரசால் கொள்முதல் செய்யப்பட்ட பாதுகாப்பு கவச உடைகள் தொடர்புடையவை அல்ல.

எச்.எல்.எல்.லைப்கேர் என்ற கொள்முதல் நிறுவனம்தான், வைத்திய சாலைகளுக்கு பாதுகாப்பு கவச உடைகளை கொள்முதல் செய்கிறது. மத்திய ஜவுளி அமைச்சகத்தின் ஒப்புதல் பெற்ற 8 ஆய்வுக்கூடங்க ளில் ஏதேனும் ஒரு ஆய்வுக்கூடத்தால் பரிசோதித்து சான்றளிக்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்தே கொள்முதல் செய்யப்படுகின்றன.

மேலும், மத்திய சுகாதார அமைச்சகம் அமைத்த தொழில்நுட்ப குழுவின் பரிசோதனையில் தேர்வு பெறும் தயாரிப்புகள் மட்டுமே வாங்கப்படுகின்றன. அத்துடன், எச்.எல்.எல்.லைப்கேர் நிறுவனமும் பரிசோதனை நடத்துகிறது. இதில் தவறு கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட தயாரிப்பு நிறுவனம் தகுதி நீக்கம் செய்யப்படும். மாநில அரசுகளும் இத்தகைய நிறுவனங்களிடம் இருந்து கொள்முதல் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மேலும், பாதுகாப்பு கவச உடைகள், என் 95 ரக முக கவசங்களின் உள்நாட்டு உற்பத்தியை இந்தியா தீவிரப்படுத்தி உள்ளது. அதன்மூலம் மாநில அரசுகளின் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. தற்போது, நாள் ஒன்றுக்கு தலா 3 லட்சம் பாதுகாப்பு கவச உடைகளும், என்95 முக கவசங்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பெயர்போன சித்திரவதையாளர் சி.ஐ.டி. பணிப்பாளராக நியமனம்

## விலாவாரியான குற்றச்சாட்டுகளுடன் ஜஸ்மின் சூக்கா பகிரங்க அறிக்கை



மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அடம்பரகே நுவான் பிரசன்ன ஜெயக் டி அல்விஸ் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கடந்த வெள்ளிக்கிழமை குற்றவியல் விசாரணைப் பிரிவின் (சி.ஐ.டி) புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பெயர்போன சித்திரவதையாளர் எனச் சொல்லப்படும் ஒருவர் சி.ஐ.டிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளமையால் அந்தப் பிரிவுக்கான சர்வதேச உதவிகள் உடனடியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

- இவ்வாறு சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கோட்டாபயவுக்கு எதிராக 2019ஆம் ஆண்டு 11 தமிழர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உட்பட சித்திரவதை தொடர்பான பலநீதிமன்ற ஆவணங்களிலும் பிரசன்ன டி அல்விஸின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அல்விஸ் உட்பட வேறு பல அதிகாரிகளின் விபரங்களைக் கொண்ட 13 பக்க ஆவணக்கோவை ஒன்று சாட்சியமாக சமர்ப்பிக்கப்பட்டது.

1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து தடுத்து வைக்கப்பட்ட பலரும் பிரசன்ன டி அல்விஸ் தம்மை சித்திரவதை செய்தார் என அல்லது அதில் தொடர்புபட்டிருந்தார் என அவரது பெயரைக் குறிப்பிட்டுள்ளார்கள். பிரசன்ன டி அல்விஸ் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மிகவும் விசுவாசமானவராக இருந்துள்ளார். போர் இடம்பெற்ற காலப் பகுதியில் அல்விஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவில் இருந்தமையுடன் அவருக்கான கட்டளைகளை கோட்டாபய ராஜபக்ஷவே நேரடியாக வழங்கினார்.

### ரி.ஐ.டி சித்திரவதை

பிரசன்ன டி அல்விஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் தலைமையகத்தில் இருந்த போது ரி.ஐ.டியினரால் திட்டமிட்ட ரீதியில் நடத்தப்பட்ட சித்திரவதைகள் 'சித்திரவதைக்கு எதிரான விசேட பிரதிநிதிகள்' மற்றும் 2015 இல் இலங்கை பற்றிய விசாரணை அறிக்கை உட்பட பல ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைகளில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் காலப் பகுதியில் ரி.ஐ.டியினால் பயன்படுத்தப்பட்ட மிருகத்தனமாக சித்திரவதை முறைகள் பற்றியும் அடுத்தடுத்து வந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வருடாந்த மனித உரிமைகள் பற்றிய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

5 நாடுகளில் ரி.ஐ.டியின் சித்திரவதைகளில் இருந்து உயிர்தப்பிய 73 பேரை செவ்விகண்டு அவர்களின் வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு 2019 ஆம் ஆண்டு சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் மோசமான பொலிஸ் அணி என்ற தலைப்பிலான ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டது.

### தண்டனையிலிருந்து தப்புதல்

இலங்கையில் தண்டனையிலிருந்து பாதுகாப்பு என்பதற்கு இந்த மனிதர் ஒரு அடையாளமாவார். சித்திரவதைக்குப் பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதை உறுதி செய்யும் கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கு உண்டு. அதன் சர்வதேச உறுதிப்பாடுகளுக்கு அமைய சித்திரவதையாளர்கள் பொதுப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் வடிகட்டப்பட்டு மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு இலங்கைக்கு உண்டு.

### சித்திரவதை

கலிபோனியாவில் 2019ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்கைப் பதிவு செய்த கனடாப் பிரஜையான றோய் சமதானம், 2007ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ரி.ஐ.டியினரின் தடுப்பில் இருந்தபோது பிரசன்ன டி அல்விஸ் மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் தன்னைப் பற்றி இடம்பெற்ற தொலைபேசி உரையாடலை தான் தற்செயலாக கேட்டார் என நீதிமன்றத்துக்கான தனது சமர்ப்பித்தலில் தெரிவித்திருந்தார். பின்னர் அன்றைய தினம் மாலை வேளையில் ரி.ஐ.டி. அதிகாரிகளால் மோசமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார் எனவும் இதன் விளைவாக இடதுகை மணிக்கட்டில் வீக்கம், முழங்காலில் காயம், வயிறு மற்றும் ஆணுறுப்பு பகுதியில் வலியும் அவருக்கு ஏற்பட்டன.

அடுத்தநாள் காலையில், முதல்நாள் இரவு என்ன நடந்தது என பிரசன்ன டி அல்விஸ் றோயிடம் கேட்டார். அதன் பின்னர் அடிக்கப்பட்டமை பற்றி செஞ்சிலுவைச் சங்கத்துக்கு சொல்லக்கூடாது என்று எச்சரிக்கை செய்த அவர் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட்டால் மேலும் அடிக்காமல் விடுதலை செய்யப்படுவாய் எனவும் கூறினார். சட்டத்தரணி ஒருவரைத் தான் பார்க்க விரும்புவதாக றோய் பிரசன்ன டி அல்விஸிடம் கேட்டார். அதற்கு 'நீ சட்டத்தரணியை வைக்க முடியாது. இங்கு எவரும் உனக்கு உதவி செய்ய முடியாது' என்று பதிலளித்தார்.

2016 இல் ரி.ஐ.டியின காவலில் வைக்கப்பட்டு அவர் சித்திரவதை செய்யப்பட்டமை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான ஒரு முறைப்பாட்டில் வெற்றி பெற்றார். அத்துடன் அவருக்கு இலங்கை அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என கட்டளையிடப்பட்டது. ஆனால் அதற்கு இலங்கை அரசு இணங்க மறுத்துவிட்டது.

### வேறு முறைப்பாடுகள்

வெற்றிவேல் ஜசிகரன் மற்றும் அவரது துணைவியார் வளர்மதி வடிவேலு மற்றும் ஜெயப்பிரகாஸ் சிற்றம்பலம் திஸாநாயகம் உட்பட பல பத்திரிகையாளர்களினுடைய அடிப்படை உரிமைகள் மனுக்களில் பிரசன்ன டி அல்விஸ் இனுடைய பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைவிட, 2009 ஆம் ஆண்டு 'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணையில் அவரது பங்கு குறித்து அல்விஸ் விசாரணை செய்யப்பட்டார். ரி.ஐ.டியின் கொலைக்காக 2010ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரியான கந்தகெதர பிரியவன்ச 2016ஆம் ஆண்டு திறந்த நீதிமன்றத்தில் ஒரு வாக்குமூலத்தை அளித்தார். இதில் லசந்தவின் கொலையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைச் சிக்கவைப்பதற்காக ஒரு வாக்குமூலம் வழங்குமாறு அல்விஸ் தன்னை நிர்ப்பந்திக்க முயற்சி செய்தமையுடன் தன்னை அரச சாட்சியாளராக்குவதுடன் தனக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் எனவும் வாக்குறுதி வழங்கினார் எனக் குற்றஞ்சாட்டினார்.

கைதிகளைக் கயிற்றால் கட்டி தலைகீழாகத் தொங்க விடுவதற்குப் பயன்படுத்துவதற்கு இரும்பு வளையையும் சித்திரவதைகளுக்கான உபகரணங்களையும் கொண்ட கொழும்பிலுள்ள ஒரு விசாரணை அறையைப் பற்றி ரி.ஐ.டியினால் தடுத்து வைக்கப்பட்டவர்கள் விவரித்தார்கள். நிர்வாணமாக்கப்பட்டு, கண்கள் கட்டப்பட்ட நிலையில் கைதிகள் அந்த அறைக்குள் கொண்டு செல்லப்படுவதைத் தான் பார்த்தார் எனவும், அத்துடன் அல்விஸ் சில சமயங்களில் அந்த அறைக்குள் போகின்றமையுடன் கைதிகளிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று தனக்கு கீழ் இருந்த அதிகாரிகளைக் குற்றஞ்சாட்டுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

### கோட்டவின் ஆள்

எல்லோரும் அல்விஸை 'கோட்டாபயவின் ஆள்' என்றே குறிப்பிட்டார்கள். அத்துடன் இதன்விளைவாக அவரைவிட மூத்த அதிகாரிகள் அல்விஸிற்கு அடங்கியே நடந்து கொண்டார்கள் எனத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது ரி.ஐ.டி. அவரது கட்டுப்பாட்டின் கீழே இருந்தது. இப்போது ஒரே குழுவைச் சேர்ந்தவர்கள் பதவியுயர்த்தப்பட்டு வருகின்றமையானது இலங்கையைக் கையாளும் அனைவருக்கும் கரிசனையை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை சி.ஐ.டியினர் அமெரிக்காவின் எந்த உதவிகளையும் பெற்றுக்கொள்ளாத வகையில் லியேகி சட்டங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். இலங்கைப் பொலிஸாருக்கு பயிற்சிகளை வழங்கிவரும் பிரிட்டன் அரசும் சி.ஐ.டியினருக்கான எல்லா நிகழ்ச்சித் திட்டங்களையும் நிறுத்த வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதனைவிட போதை மருந்துகள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிரான ஐ.நா. அலுவலகம் மற்றும் ஐ.நா. அமைதிகாக்கும் பணி உட்பட ஐக்கிய நாடுகளின் அனைத்துப் பிரிவுகளும் சி.ஐ.டியினருக்கு எதிராக ஒரே மாதிரியான வடிகட்டல் கொள்கையைப் பயன்படுத்த வேண்டும் - என்றுள்ளது

# ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவை கைப்பற்றப்போவதாக சஜித் அணி எச்சரிக்கை

கொழும்பு, மே 27

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவை கைப்பற்றப் போவதாக, சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகம், கட்சியின் உறுப்பினர்களுக்கே சொந்தமானது, அது ரணில் விக்கிரமசிங்கவிற்கு சொந்தமானதில்லை என்று முன்னாள் அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியினர் தோல்வியடைவார்கள் என்றும், அவர்கள் தோல்வியடைந்ததும், ஐக்கிய மக்கள் சக்தி சிறிகொத்தாவுக்குச் செல்லும் என்றும், அஜித் பெரேரா கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஊடகங்களில் கட்டுக்கதைகளை பரப்புகின்றார் எனக் கூறியுள்ள அஜித் பெரேரா, ஐக்கிய மக்கள் சக்தி தனது தலைமை அலுவலகத்தை மூடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதும் அவ்வாறான ஒரு கட்டுக்கதை தான் என்றும், தெரிவித்துள்ளார்.

# இலங்கை கிரிக்கெட் ஷெஹான் மதுங்காவை இடைநீக்கம்



உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் வேகப்பந்து வீச்சாளர் ஷெஹான் மதுங்காவை அனைத்து வகையான கிரிக்கெட்டுகளிலிருந்தும் இடைநீக்கம் செய்ய இலங்கை கிரிக்கெட் முடிவு செய்தது.

சட்டவிரோத போதைப்பொருள் வைத்திருந்ததாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவுஎடுக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் இலங்கை கிரிக்கெட்சபையால் முழுவிசாரணை நடத்தப்படும் வரை இடைநீக்கம் செய்வதற்கான முடிவு அப்படியே இருக்கும் என்று அது கூறியது.

# கொரோனா நோயாளிகள் சென்ற வாகன அணியில் 4 அம்புலன்ஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து!






மினேரியா தனிமைப் படுத்தப்பட்ட மையத்திலிருந்து ஹோமாகம மருத்துவமனைக்கு கொரோனா நோயாளிகளை ஏற்றிச் சென்ற நான்கு அம்புலன்ஸ்கள் நேற்று மாலை கந்தலாண்டா பகுதியில் ஒன்றுடன் ஒன்றாக மோதியுள்ளன.

குவைத்தில் இருந்து திரும்பியவர்களில் கோவிட் - 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்ட இருபத்திநான்கு நோயாளிகளைஏற்றிச்சென்ற ஏழு அம்புலன்ஸ்களில் நான்கே மருத்துவமனைக்கு செல்லும் வழியில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக மோதி விபத்துக்குள்ளாகின் எனத் தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் எந்த நோயாளியும் காயமடையவில்லை. அவர்கள் அனைவரும் பொலிஸாரின் உதவியுடன் ஹோமகாம மருத்துவமனைக்குப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கட்டாரில் சிக்கியோரை ஏற்றி வர விமானம் நேற்று மாலை புறப்பட்டது

கட்டார் சென்று டோஹாவில் சிக்கித்தவிக்கும் 279 இலங்கையரை அழைத்து வர நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஏற்பாடாகியிருந்த சிறப்பு விமானம் பாதுகாப்பு நெறிமுறைகளை கருத்தில் கொண்டு நிறுத்தப்பட்டது.

எனினும் அந்த விமான சேவை இன்று நடைபெறுகின்றது.

இலங்கையில் கடந்த சில நாள்களாக கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை எகிறி உள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர்களே அதற்கு முக்கிய காரணம் ஆகும்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை குவைத்தில் இருந்து திரும்பிய 90 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனை அடுத்து அன்றையதினம் கட்டாரிலிருந்து இலங்கையரை ஏற்றி வரவிருந்த விமான சேவை திடுதிப்பென நிறுத்தப்பட்டது.

இருப்பினும் அங்குள்ள இலங்கை தூதரகம் அவர்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திய நிலையில் நேற்று மாலை மீண்டும் அவர்களை இலங்கைக்கு அழைத்துவர ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்கு சொந்தமான யு.எல் .217 இலக்க விமானம் சென்றது என விமான நிலைய வட்டாரங்கள் காலைக்கதிருக்குத் தெரிவித்தன. இதன்படி இன்று காலை 5.30 மணிக்கு டோஹாவில் இருந்து 279 இலங்கையருடன் இந்த விமானம் கட்டுநாயக்கவை வந்தடையும்.

# அவசரமாய் திட்டமிடல் அகிலத்தைக் குலைத்துவிடும்!

தனிமைச் சிறையினிலே தவித்திருந்த மக்களெலாம்
சிறகை விரித்தபடி தெரிவெங்கும் திரளுகிறார்
உலகையே வாட்டிநிற்கும் உயிர்கொல்லி கொரோனாவோ
விலகியே போனதாய் சொல்லுவார் யாருமுண்டோ!

விமானங்கள் பறக்கவிட விரைந்துள்ளார் இப்போது
கொரோனாவும் மகிழ்வுடனே கூடவே குதித்துவரும்
சுகாதார மையமோ தளர்வெடுப்பைத் தடுக்கிறது
அரசியல் மையமோ அதைக்காணா நிற்கிறது!

வியாபார மையங்கள் வெளிச்சமாய் தெரிகிறது
விழுந்தடித்து மக்களெலாம் தேடுகிறார் பலவங்கு
முகக்கவசம் செயலிழந்து முடங்கியே கிடக்கிறது
முன்தள்ளி பின்தள்ளி மக்களெல்லாம் திரிகின்றார்!

தேனீர் கடைகள் திறந்துமே இருக்கிறது
இடைவெளியைப் பாராமல் ஏந்துகிறார் கோப்பைகளை
விற்கின்றார் முகத்தினிலும் முகக்கவசம் காணவில்லை
விரும்பிக் குடிப்பாரும் அதைப்பொருளாய் கொள்ளவில்லை!

மருந்துவிற்கும் கடைகளிலும் பாதுகாப்பாய் அவரில்லை
வாங்கச் செல்லும் எவரிடத்தும் முகக்கவசம் காணவில்லை
பேருந்தில் செல்வாரும் பெரும்பாலும் அணிவதில்லை
யாவருமே கொரோனாவை மறந்துவிட்டே திரிகின்றார்!

கையுறைகள் அணியாமல் எரிபொருளை நிரப்புகிறார்
காசுவாங்கும் கடைகளிலும் கையுறையைக் காணவில்லை
காணாமல் கொரோனாவும் ஆகியதே எனுமெண்ணம்
எல்லோரின் மனதினிலும் எழுச்சிபெற்று இருக்கிறது!

கொண்டாட்டம் என்கின்றார் கூடலாம் என்கின்றார்
வண்டாகத் திரிவதற்கு வாய்ப்பென்றும் மகிழுகிறார்
திண்டாடித் திருந்ததுவும் திகைத்துமே இருந்ததும்
இன்னுமே இதயத்தில் இருப்பதையும் மறந்துவிட்டார்!

ஒழிந்தது கொரோனாவென்றால் உலகமே மகிழ்வடையும்
அழிந்தது கொரோனாவென்றால் ஆனந்தம் பெருகிநிற்கும்
கொரோனாவோ ஒருபக்கம் பார்த்தபடி இருக்கையிலே
அவசரமாய் திட்டமிடல் அகிலத்தைக் குலைத்துவிடும்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - மெல்பேண், அவுஸ்திரேலியா

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# யாழ். மாவட்ட வறிய மக்களின் மீளெழுச்சிக்காக பல்வேறு உதவித் திட்டங்களை வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 27

கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சினால் யாழ். மாவட்டத்தில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் மற்றும் கடற்றொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதார தேவைகருதி பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ். மாவட்டத்தில் வறுமை நிலையில் இருக்கும் மக்களின் வாழ்வாதார மேம்பாடுகளை முன்னிறுத்தியே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 100 க்கும் அதிகமான வறிய குடும்பங்களுக்கு கருவாடு பதனிடும் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் கடற்றொழில் சார் மக்களின் சுகாதார மேம்பாடுகளை முன்னிறுத்தி 210 குடும்பங்களுக்கு மலசல கூடங்கள் திருத்துவதற்கான நிதி உதவியும் எமது அமைச்சினால் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கடற்றொழில் சார் 30 குடும்பங்களுக்கு வீடுகளை புனரமைப்பதற்கான குறிப்பாக கட்டி முடியாத நிலையில் உள்ள வீடுகளை புனரமைப்பதற்கான நிதி உதவியையும் எம்மால் வழங்கப்படவுள்ளது.


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

இதே நேரம் கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் தாம் பிடிக்கும் கடலுணவுகளை பழுதடையாது பாதுகாத்து கரைக்கு கொண்டுவருவதற்காக 75 கடற்றொழிலாளர்களுக்கு ஐஸ் பெட்டிகளும் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டங்களை வழங்குவதற்கான தரவுகள் திரட்டப்பட்டுள்ள நிலையில் சில தினங்களுக்குள் அத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது – என்றார்.

# முல்லைத்தீவு – மாங்குளம் பிரதான வீதியில் யானை தாக்கியதில் வயோதிபர் படுகாயம்!

முல்லைத்தீவு, மே 26

முல்லைத்தீவு – மாங்குளம் பிரதான வீதியில் காட்டு யானை தாக்கியதில் படுகாயமடைந்த முதியவர் ஒருவர் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 7 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய நாகலிங்கம் முத்துலிங்கம் என்பவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் 14 ஆம் கட்டை பகுதியில் காட்டுயானை தாக்கியுள்ளது.

அவர் ஏற்கனவே விபத்தில் காயமடைந்த நிலையில் ஊன்றுகோலுடன் சைக்கிளில் பயணித்தபோது யானை தாக்கியதில் இரு கால்களிலும் படுகாயமடைந்துள்ளார். சைக்கிளையும் யானை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளது.



# நல்லூரில் முதியவரின் உயிரிழப்புக்கு காரணமான 2 இளைஞர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், மே 27

நல்லூர் யமுனா ஏரி வீதியில் தனிமையில் வசித்து வந்த முதியவரின் உயிரிழப்புக்கு காரணமானவர்கள் என்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாணம், நல்லூர் யமுனா ஏரி வீதியில் தனிமையில் வசித்த முதியவரின் வீட்டுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை (மே 22) சென்ற இளைஞர்கள் இருவர், அங்கு பப்பாசிப்பழம் பறிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர். அவர்களைப் பப்பாசிப்பழம் பறிக்க முதியவரும் அனுமதித்தார்.

பப்பாசிப்பழம் பறித்துவிட்டதாக முதியவரிடம் தெரிவித்த இளைஞர்கள் இருவரும் அவரது அலைபேசியைத் தருமாறு கோரியுள்ளனர். எனினும் முதியவரிடமிருந்து அலைபேசியைப் பறித்து எடுத்த இருவரும் அவரைத் தள்ளி வீழ்த்திவிட்டுத் தப்பித்துள்ளனர்.

சம்பவத்தையறிந்த அயலவர்கள் முதியவரின் உடல்நிலை அறிந்து அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் முதியவர் சிசிக்சை பயனின்றி மறுநாள் சனிக்கிழமை இரவு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் முதியவரின் உயிழப்புக்குக் காரணமான இளைஞர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் வைத்து பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப விசாரணைகளின் பின்னர் அவர்கள் இருவரும் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல், சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் ஜூன் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், அன்றைய தினம் சாட்சிகளை அழைத்து அடையாள அணிவகுப்பை நடத்துமாறும் அறிவுறுத்தினார்.

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS
யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656
தொலைபேசி இல. 021 222 4353 021 492 3200 071 454 6960
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்
★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தலைமைக் காரியாலயம் 226, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி
வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை



# நான்கு முனைகளால் அபகரிக்கப்படும் வட்டுவாகல் கிராமமும் நந்திக்கடலும்

## வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரவிகரன் விசனம்

வட்டுவாகல் கிராமமும் நந்திக்கடலும் நான்கு முனைகளால் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இவை பறிபோய்க் கொண்டிருக்கின்றன என எச்சரிக்கிறார் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்.

முல்லைத்தீவில் உள்ள தமது அலுவலகத்தில் நேற்று ஊடக சந்திப்பு ஒன்றை அவர் நடத்தினார்.

அதன் போது அவர் நைத எச்சரிக்கையை விடுத்தமையோடு இவற்றைத் தடுக்க சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் –

மகாவலி எல் வலயத்தின் ஊடாக எப்படி முல்லைத் தீவில் உள்ள காணிகள் அதனுடன் சேர்ந்த நிலங்கள் அபகரிப்புக்குள்ளாகின்றனவோ அதேபோல் சத்தமில்லாமல் வட்டுவாகல் கிராமமும் நந்திக்கடலும் பறிபோய்க் கொண்டிருக்கின்றன.

முள்ளிவாய்க்கால் கிழக்கு என்று சொல்லக்கூடிய இடத்தில் 468 குடும்பங்கள், வட்டுவாகல் கிராமத்தில் 271 குடும்பங்கள் இருக்கின்றன. வட்டுவாகல் கிராமம் 1817 ஆம் ஆண்டு ஜே.பி.லூயிஸ் என்பவரின் புத்தகத்தில் அன்று 117 தமிழ் மக்கள் வாழ்ந்தனர் எனவும், அதேபோல் 1839 ஆண்டு குறிப்பு 162 தமிழ்மக்கள் அங்கு வாழ்ந்தனர் எனவும் சொல்கின்றது. இவ்வாறு இருக்கும் போது தனித்தமிழ் சைவக்கிராமமான இது இன்று சுற்றி வளைக்கப்பட்டு நந்திக்கடலுடன் சேர்ந்து தமிழர்களின் வாழ்வாதாரங்கள் எல்லாம் நசுக்கப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு விகாரையும் கிடையாது. ஆனால் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது ஒரு பௌத்த சிங்கள குடும்பம் கூட இல்லாத தமிழ் கிராமமான வட்டுவாகல் கிராமத்தில் தனியாக பெரிய பௌத்த விகாரை அமைத்து தொல்லியல் திணைக்களம் தமது ஆளுகைக்குள் கொண்டுவரும் நோக்குடன் அதனை செய்துள்ளார்கள்.

அதனை சுற்றி 100 ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டு படைமுகாம் ஒன்று அமைத்துள்ளார்கள். கடற்படை தளம் ஒன்று 617 ஏக்கர் நிலத்தில் அமைத்துள்ளார்கள். வட்டுவாகல் கடற்படை தளம் வட்டுவாகல் முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியினை சேர்ந்த மக்களின் காணிகள் கடற்படையினரால் அபகரிக்கப்பட்டு பாரிய கடற்படைத் தளமாக அமைக்கப்பட்டுள்ளது.

2017.01.24 ஆம் திகதிய வர்தகமானி மூலம் வன ஜீவராசிகள் திணைக்களம் 4141.67 ஹெக்டர் நிலப்பரப்பு, 10230 ஏக்கர் நிலத்தினை நந்திக்கடலோடும் நந்திக் கடலை அண்மித்த பிரதேசத்தினோடும் தங்கள் ஆளுகைக்குள் கொண்டுவந்துள்ளார்கள்.

இராணுவம் வனஜீவராசிகள் திணைக்களம், கடற்படைத்தளம், தொல்லியல. திணைக்களம் ஆகியன வட்டுவாகல் சிறு கிராமத்தினை முழுமையாக விழுங்கிக் கொண்டிருக்கின்றன.

இது முன்னர் தனித்தனியாக வட்டுவாகல் கோட்டபாய கடற்படை முகாம் அமைந்துள்ள 617 ஏக்கர் காணிக்காக மக்களுடன் இணைந்து தொடர் போராட்டங்களை செய்து வந்தபோது ஒருபயனும் கிடைக்கவில்லை. ஆனால் பொலிசார் எங்களை கைதுசெய்து இன்றும் அதற்கு வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

தமிழர்களின் பாதுகாப்பிற்கு இருந்தவர்கள் தற்போது இல்லாத நிலையில் 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் எங்களை சுற்றிவளைத்து நான்கு பகுதியாலும் வட்டுவாகல் கிராமம் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

இதனை சர்வதேசம் எந்தவகையில் பார்த்துக்கொண்டிருக்கின்றது.? பல வடிவங்களில் தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் – தமிழர்களின் சொத்துக்கள், இனம் அழிக்கப்பட்டிருக்கும் நிலையில் – இருக்கின்ற மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக முழுமையாக நம்பி இருக்கும் நந்திக்கடல் ஒருபகுதி கடற்படை ஆக்கிரமித்த படியும், மறுபகுதி இராணுவம் ஆக்கிரமித்த படியும், வனஜீவராசிகள் திணைக்களமும், தொல்லியல் திணைக்களமும் பௌத்த சிங்கள ஆதிக்கத்தினை கொண்டுவரும் நோக்கமாகத் தமிழர்களை விழுங்கிக் கொண் டிருக்கின்றார்கள்.

இதற்கு சர்வதேசம் பதில் சொல்லியே ஆகவேண்டும்.– என்றும் அவர் தெரிவித்தார்.

## நடந்து சென்றவர் விழுந்து மரணம்

திருகோணமலை நகரில், கடல்முக வீதி மற்றும் மத்திய வீதி சந்தியில் இன்று காலை 11.00 மணியளவில் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவர், திடீரென வீதியில் விழுந்து மரணமானார்.

திருகோணமலை, நிலாவெளி வீதி கேணியடி பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய தங்கதுரை என்பவரே இந்தச் சம்பவத்தில் மரணமானார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து விரைந்து சென்ற பொலிஸார் சடலத்தை அம்புலன்ஸ் முலம், திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

### ராணுவத்தின் கடமைக்கு இடையூறு;

## சந்தேக நபர்கள் மூவருக்கும் கடும் நிபந்தனையுடன் பிணை

யாழ்ப்பாணம், மே 27

இராணுவத்தினருடன் முரண்பட்டு அவர்களது கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட மூவரையும் கடும் நிபந்தனைகளுடனான பிணையில் விடுவித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

உரும்பிராய் பகுதியில் கடந்த சனிக்கிழமை இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தபோது, ஓட்டோவில் பயணித்த மூவர் உரிய முறையில் முகக்கவசம் அணியாதிருந்தனர். அதனைச் சரியான முறையில் அணியுமாறு இராணுவத்தினர் கூறியபோது, இரு தரப்புக்கு இடையில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்கள் மூவரும் அங்கிருந்து பயணிக்கும்போது இராணுவத்தினரை நையாண்டி செய்தனர் எனத் தெரிவித்து துரத்திச் சென்ற இராணுவத்தினர், வழிமறித்துத் தடுத்தனர். மூவர் மீதும் இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டனர். பின்னர் அவர்கள் மூவரும் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மூவரும் இராணுவத்தினரின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்படுத்தப்பட்டனர். அவர்கள் பயணித்த ஓட்டோவும் சான்றுப்பொருளாக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் மூவரும் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

சந்தேக நபர்கள் மூவரும் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன், பிணை விண்ணப்பத்தை மன்றில் முன்வைத்தார்.

சந்தேக நபர்கள் சார்பிலான விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிவான், கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கி உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் மூவரும் தலா 2 ஆள் பிணைகளை முன்வைக்கவேண்டும். சந்தேக நபர்கள் ஒவ்வொரு வாரமும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடவேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகள் மன்றினால் விதிக்கப்பட்டது. அத்தோடு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## பகலில் ஊரடங்கு தளர்வினால் வழமைக்குத் திரும்பிய கொழும்பு

இலங்கையில் கொரோனா தொற்று ஆபத்து வலயங்களாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டு கடந்த இரண்டு மாதங்களுக்கும் மேலாக தொடர் ஊரடங்குச்சட்டம் அமுல் படுத்தப்பட்டு வந்தது.

நேற்றையதினம் நாடளாவிய ரீதியில் தளர்த்தப்பட்ட ஊரடங்கு சட்டத்தில் கொழும்புமற்றும்கம்பகாமாவட்டங்களும் அடக்கம்.

இவ்வாறு ஊரடங்குச்சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர் தலைநகர் கொழும்பில் மக்கள் தமது அன்றாடக் கடமைகளை மேற்கொண்டதனை அவதானிக்க முடிந்தது.









காலைக்கதிர் Kalaikkathir
ஆறுமுகநாவலர்
16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு
தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

இன்று (27/05/2020) தலைப்பு
ஆறுமுகநாவலர்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623




# தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'விஞ்ஞானி' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'ஆறுமுகநாவலர்'



படம் 1

**படம் 1**
த. கபிலாஷ் - தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

**படம் 2**
எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி




படம் 2

த. யதுனேஷ் - தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

எஸ். ஹெம்சாஜினி - தரம் 10
தி/ சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி

ச. அபினாஷ் - தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

லனுஜன் நவரட்ணம் - தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

என். கொட்வின் - தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

பி. பிரவீன் - தரம் 11
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எம். ஏ. ஷெரொனி - தரம் 8
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அருள்நாத் அக்சயன் - தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

சாருகா சயந்தன் - தரம் 9
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

கே. நிருஜிகா - தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி

ஏ. அனன்யா - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

அன்றியா தக்ஷரா காண்டீபன் - தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஆர். அஜிஷன் - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

சுமன் ராஜ் சஷ்வந் - தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எட்ரியன் லுகி ஜோன் - தரம் 8
ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை

ஆர். பிரீதி - தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கசிந்திரா கிரிஸ்பின் - தரம் 5
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஞா. ரிசாந் - தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

# யாழ். அஞ்சல் திணைக்கள செயற்பாடுகள் வழமைக்கு





யாழ்ப்பாண மாவட்டத்தில் அஞ்சல் திணைக்களத்தின் செயற்பாடுகள் யாவும் வழமைக்குத் திரும்பியுள்ளதாக யாழ்ப்பாண பிரதம தபாலக அதிபர் திருமதி. சாந்தகுமாரி பிரபாகரன் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையில் அஞ்சல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், பங்குனி மாதம் 20ஆம் திகதி கோரோனா பிரச்சினையினால் நாடு முடக்கப்பட்ட நிலையில் அஞ்சல் திணைக்களத்தின் சகல சேவைகளும் முடக்கப்பட்டிருந்தது. அந்த சேவையானது ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்பியது.

50 வீத ஊழியர்களின் பங்களிப்போடு திணைக்களங்கள் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க எங்களால் குறித்த சேவையானது மட்டுப்படுத்தப்பட்டளவில் முன்னெடுக்கப்பட்டன.

அந்த மட்டுப்படுத்தப்பட்ட சேவையானது மே மாதம் 18ஆம் திகதி வரை வழங்கப்பட்டதோடு, பொது மக்களுக்கான இயன்றளவு சேவையும் அஞ்சல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது.

மே 18ஆம் திகதியிலிருந்து இன்றைய தினம் வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்ட எமது திணைக்களத்தின் சேவையானது, இன்றிருந்து வழமைக்குத் திரும்பியுள்ளது.

வழமையாக ரயில் மற்றும் பேருந்து மூலம் எமது தபால் பொதிகள் வேறு மாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்டது.

எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது திணைக்களத்தின் வாகனத்தின் மூலமே ஒரு கிழமைக்கு இரண்டு தடவைகள் தபால் பொதிகள் கொண்டுவரப்பட்டு, அவை இங்கே மக்களுக்கு உரிய முறையில் சேர்ப்பிக்கப்பட்டன - என்றார்.

# தேர்தலுக்கு உரிய தீர்வை நீதிமன்றம் வழங்கும் என ஆளும் தரப்பு நம்பிக்கை

## தேர்தல்கள் ஆணைக்குழு மீது கடும் விமர்சனம்

கொழும்பு,மே 27

பொதுத்தேர்தலை நடத்துவதற்கு உரிய தீர்வினை நீதிமன்றம் வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளதென ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு இராஜகிரியவில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தரும், துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான அருந்திக பெர்னாண்டோ தேர்தல்கள் ஆணைக்குழு மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேர்தல் ஆணைக்குழுவின் ஒரு சிலரது செயற்பாடுகள் சந்தேகத்திற்குரியனவாக அமைந்துள்ளன.

இவ்வாறு சுயாதீன ஆணைக்குழுவில் இருந்து ஒருதலைப் பட்சமாக செயற்படுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொவிட் - 19 வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

எதிர்த்தரப்பினர் மாத்திரமே தங்களின் அரசியல் தேவைகளுக்காக அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கின்றார்கள்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளை காட்டிலும் அரசாங்கம் கொரோனா வைரஸ் பரவலை செம்மையாகக் கட்டுப்படுத்தியுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் முப்படையினரது ஒத்துழைப்பு ஊடாகவே சுகாதார தரப்பினர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

தற்போது கடற்படையினர் மாத்திரமே அதிகளவு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்படுகின்றார்கள்.

கடற்படையினை கண்காணிக்க விசேட வழிமுறை செயற்படுத்தப்பட்டுள்ளது. பொதுத்தேர்தலை நடத்துவதற்கான பாதுகாப்பான சூழல் தற்போது காணப்படுகின்றது.

பொதுத்தேர்தல் தொடர்பில் நீதிமன்றம் உரிய தீர்வினை வழங்கி ஜனநாயக உரிமையினை பாதுகாக்கும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர புதிய முறைமை

கொரோனா வைரஸ் நோய்த்தொற்றுப் பரவலுக்கு மத்தியில் நிர்க்கதியாகவுள்ள அல்லது பல்வேறு கஷ்டங்களுக்கு முகம்கொடுத்துள்ள - வெளிநாடுகளில் உள்ள - இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவருவதற்காகப் புதிய முறைமையொன்று தயாரிக்கப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள கலந்துரையாடலின்போது புதிய நிகழ்ச்சித் திட்டம் குறித்துத் தீர்மானிக்கப்படவுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் ஜூன் மாத விமானப் பயணம் அதற்கு ஏற்ப திட்டமிடப்படும்.

நோய்த்தொற்று உலகளாவிய ரீதியில் உள்ள காரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் நிகழ்ச்சித்திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

சீனாவின் வூஹான் நகரில் இருந்த மாணவர்கள் உள்ளிட்ட 33 இலங்கையர்கள் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர். நோய்த் தடுப்பு நடவடிக்கையின் பின்னர் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். யாத்திரை சென்று இந்தியாவின் சில நகரங்களில் நிர்க்கதியாகவிருந்த 839 இலங்கையர்கள் மார்ச் 19 ஆம் திகதி நாட்டை வந்தடைந்தனர்.

கடந்த மே 25ஆம் திகதியாகும்போது 20 நாடுகளில் இருந்து 5 ஆயிரத்து 485 பேர் இவ்வாறு நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். அவர்களில் 4 ஆயிரத்து 826 பேர் வெளிவிவகார அமைச்சினாலும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களினாலும் இனம் காணப்பட்டவர்களாவர். பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் அவர்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையானோரே கொரோனா நோய்த்தொற்றுடையவர்களாக உறுதிசெய்யப்பட்டிருந்தனர்.

எனினும், அண்மையில் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் டுபாயிலிருந்து வருகை தந்த 197 பேரில் 22 பேர் நோய்த்தொற்றுடையவர்கள் என உறுதிசெய்யப்பட்டது. குவைத்திலிருந்து வருகை தந்த 462 பேரில் 150 பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவர்களில் 96 பேர் கொரோனா நோயாளிகள் என இனம்காணப்பட்டுள்ளனர். மேலும் 300 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

குவைத்திலிருந்து நாட்டுக்கு வருகைதந்த அனைவரும் பல்வேறு காரணங்களினால் அந்நாட்டில் தடுப்பு நிலையங்கள் அல்லது நாடு கடத்தப்படுவதற்கான முகாம்களில் இருந்தவர்களாவர்.

நோய்த்தொற்றுடையவர்களாக இனம்காணப்பட்டுள்ளவர்களுக்கு சிகிச்சையளிப்பதும் முக்கியமானதாகும். இந்த பின்புலத்தில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரும் முறைமையை திருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அழைத்துவரப்படாத போது அவர்களுக்கு ஏற்படக்கூடிய நிலைமைகளை மனிதாபிமான ரீதியாக நோக்கி அவர்களை அழைத்து வரும் நடவடிக்கையை தொடர்ந்தும் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

புதிய முறைமையை தயாரிப்பதற்காக இன்று இடம் பெறவுள்ள கலந்துரையாடலில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, ஜனாதிபதி அலுவலகத்தின் வெளிவிவகாரங்களுக்கான மேலதிக செயலாளர் ஜயனாத் கொலம்பகே, விசேட வைத்திய நிபுணர் பபா பலிஹவதன, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.05.2020 இல் வெளியிடப்பெற்றது.